# செவிச்செல்வம்

## "Diploma in Community Radio & Mass Communication"

## Radio Enabled Learning

August -2019

STUDY MATERIAL

CHAPTER 6 - FINANCIAL SUSTAINABILITY

SRUTHI CRS 90.8 MHz
Sri Sankara Arts & Science College Campus, Enathur, Kanchipuram – 631 561

# DIGITAL SERVICES
# இணையவழி சமுதாய வானொலி சேவைகள்

CHAPTER – 6
EPISODE - 28

SRUTHI CRS 90.8 MHz

Sri Sankara Arts & Science College Campus, Enathur, Kanchipuram – 631 561

# நிதி நலைத்தன்மை

- முன்னுரை
- வாடகை
- தயாரிப்பு மற்றும் சந்தைப்படுத்தல்

# முன்னுரை

- இணையம் மற்றும் செல்பேசி வாயிலாக சமுதாய வானொலி நிலையத்தின் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பும் போது அது உலகின் எந்த மூலையில் உள்ள மக்களையும் சென்றடைய வாய்ப்பாக இருக்கும்.
- ஆனால் அவ்வாறு செய்யும் போது அது வானொலி சேவை என்பதில் இருந்து சற்றே விலகி இணைய சேவையாக மாறிவிடும்.
- இன்றைய நிலையில் செல்பேசி பயன்படுத்துவோரின் எண்ணிக்கை மிக அதிக அளவில் உயர்ந்து உள்ளது, அதனால் வானொலி நிலைய நிகழ்ச்சிகளை செல்பேசி வாயிலாக கேட்பதற்கான வழிவகைகளை காணுவது தவறான யோசனை ஒன்றும் கிடையாது.

# முன்னுரை

- இன்றைய நிலையில் செல்பேசி பயன்படுத்துவோரின் எண்ணிக்கை மிக அதிக அளவில் உயர்ந்து உள்ளது, அதனால் வானொலி நிலைய நிகழ்ச்சிகளை செல்பேசி வாயிலாக கேட்பதற்கான வழிவகைகளை காணலாம்.
- Google மற்றும் Youtube ஆகியவை வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை உயர்வதை பொருத்து அந்த நிகழ்ச்சியின் உரிமையாளருக்கு நிதி வழங்குகின்றது.
- சமூக ஊடகங்களான Facebook, Twitter போன்றவற்றில் சமுதாய வானொலி நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன.

# முன்னுரை

- மக்கள் எப்பொழுதும் உள்ளூர் செய்திகளுக்கு முக்கியத்துவம் தருவார்கள், பிறகு உள் மாவட்டம், பிறகு மாநிலம், பிறகு நாடு என்று முக்கியத்துவம் விரிவடையும்.
- சமுதாய வானொலி நிலையத்தில் தரப்படும் செய்திகள் மற்றும் கருத்துக்கள் இதற்கு ஒப்ப அமையுமானால் அது மக்களின் கவனத்தை வெகுவாக கவர முடியும்.
- நேயர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதன் மூலம் விளம்பர வருவாய் அதிகமாக வருவதற்கு வாய்ப்பு உள்ளது.

# வாடகை மூலம் நிதியை பெருக்குதல்

- தொலைத்தொடர்பு சாதனங்களை நாம் சமுதாய சேவை மையமாக பயன்படுத்துவதற்கு வாடகைக்கு வழங்கலாம்.
- அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களாக இதை நாம் பயன்படுத்தலாம் அல்லது சமுதாய சேவை நிறுவனங்களுக்காகவும் இதனை நாம் பயன்படுத்தலாம்.
- ஒரு இடத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட சமுதாய வானொலி நிலையங்கள் இருந்தால், அவைகள் ஒலிபரப்பு சாதனங்களை தங்களுக்குள் பகிர்ந்து கொள்வதன் மூலம் கணிசமான தொகையை சேமிக்க முடியும்.

# வாடகை மூலம் நிதியை பெருக்குதல்

- அதேபோல் மின் உபகரணங்களையும் அவர்கள் பகிர்ந்து கொண்டு பயன்படுத்துவார்களேயானால் அது அவர்களுக்கான செலவினங்களை கணிசமான அளவு குறைக்கும்.
- சமுதாய வானொலி நிலையத்தின் உள் கட்டமைப்பு வசதிகளை நாம் குறிப்பிட்ட நேரத்தில் மட்டும்தான் பயன்படுத்துவோம், நேரடி காட்சி ஒளிபரப்பும் போது மற்றும் நிகழ்ச்சிகளை பதிவு செய்யும் நேரம் மட்டுமே வானொலி நிலையத்தில் உள்ள கருவிகளை நாம் பயன்படுத்துவோம்.

# வாடகை மூலம் நிதியை பெருக்குதல்

- நாளொன்றுக்கு தோராயமாக 10 சதவிகித நேரமே இவ்வசதிகளை நாம் பயன்படுத்துவோம் மீதமிருக்கும் பெருவாரியான நேரத்தை நாம் பிறருக்கு வாடகைக்கு விடும்போது அதன் மூலம் கணிசமான தொகை சமுதாய வானொலி நிலையத்திற்கு கிடைக்கும்.
- உதாரணமாக குரல்களை பதிவு செய்வதற்காகவும், படங்களுக்கு பின்னணி குரல்களை பதிவு செய்வதற்காகவும், உள்ளூர் பாட்டு கலைஞர்கள் தங்கள் பாடல்களை பதிவு செய்வதற்காகவும் இவற்றை நாம் வாடகைக்கு விடலாம்.

# தயாரிப்பு மற்றும் சந்தைப்படுத்தல்

- திறமை, கலை மற்றும் கடின உழைப்பு ஆகியவற்றின் பயனுள்ள கலவையான எழுச்சியூட்டும், இசையை உருவாக்க சமுதாய வானொலி நிலையத்தை பயன்படுத்தலாம்.

- இசை பதிவுசெய்யும் மையம் இல்லாதவர்கள் சமூக வானொலி நிலையம் பதிவு செய்யக் கிடைக்கும்போது தங்கள் திறமையை வெளிப்படுத்த பயன்படுத்தலாம்.

- பல கலைஞர்களுடன் பணிபுரிந்திருந்தால் இதுபோன்ற பல படைப்புகளை நாம் உருவாக்க முடியும்.

## *தயாரிப்பு மற்றும் சந்தைப்படுத்தல்*

- சமுதாய வானொலி நிலையம் உள்ளூர் கலைஞர்கள் தங்கள் பாடல்களை பதிவுசெய்து அதை ஒலிபேழை செய்வதற்காக பயன்படுத்தலாம்.
- இதன்மூலம் அவர்களுடைய திறமையை வளர்த்துக்கொள்வதற்கும் வாய்ப்பாக அமையும், அதேநேரத்தில் சமுதாய வானொலி நிலையத்திற்கு இதன் மூலம் வருவாயும் கிடைக்கும்.